**15.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**இன்று (15.03.2020) மெட்ரோ இரயில் நிலையங்களில் இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 'ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன்' இணைந்து மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (15.03.2020) மாலை 4:00 மணி முதல் இரவு 7:30 மணி வரை திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள், மற்றும் மெட்ரோ ஊழியர்கள் சுமார் 250 பேர் இந்த முகாமில் இன்று பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

இரத்தத்தின் வகை கண்டறிதல்,
சர்க்கரை சோதனை,
எடை சோதனை,
இரத்த அழுத்தம் சோதனை,
கண் பரிசோதனை.
மற்றும் ஆலோசனைகள் போன்றவை வழங்கப்பட்டது.

மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 'அகரம் அறக்கட்டளையுடன்' இணைந்து இன்று (15.03.2020) இரவு 7:00 மணி முதல் 7:50 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் பிளாஸ்டிக் தவிர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, இன்று (15.03.2020) பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை" கலைக்குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.